**தலைப்பு 162 – மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 சனவரி 13 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், அந்த தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் கீழ்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றறிக்கையின் 7(vi) பந்தியின் அறிவுறுத்தல் களுக்கு முரணாக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சீராக்கம் செய்வதற்கு முன்னரான கட்டுநிதி கணக்கின் மீதி வரவு வைக்கப்பட கூடாத ரூபா 1,610,236 ஆன மீதியொன்று வரவு வைக்கப்பட்டிருந்ததுடன், செலவு பதிவுகள் மேற்கொள்ளப்பட கூடாத ரூபா 1,610,236 ஆன மீதியொன்று செலவு வைக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு இணங்க குறித்த சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு 2019 ஆம் ஆண்டிற்கான கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. |
| (ஆ) | சுற்றறிக்கையின் 3.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல்கள் கூற்றிற்கு வரவு வைக்கப்பட வேண்டிய ரூபா 1,140,917,026 வைப்பு பெறுவனவுகள் மற்றும் செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 141,921,563 தொகையான வைப்பு மீள் செலுத்தல்கள் உள்ளடக்கப்பட்டு நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | 2019 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு இணங்கவே தயாரிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உதவி மற்றும் மாற்றல்களின் பெறுமதி ரூபா 1,157,559 ஆன போதிலும் அது ரூபா 30,151,648,300 நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக உதவிகள் மற்றும் மாற்றல்களின் பெறுமதி ரூபா 30,150,490,741 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான தரவுகளை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | ஆண்டின் இறுதியில் உள்ளபடியான நடைமுறை வேலைகள் (Work in Progress) இன் கீழ் உள்ள பெறுமதிகள் காசுப் பாய்ச்சல் கூற்றில் உதவி மாற்றல்களின் கீழ் சீராக்கப்பட்டுள்ளது. இது 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரியாக திருத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

### 1.6.3 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரியினால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதி நிதியல்லாத சொத்துக்களின் கணக்கு அறிக்கையின் பிரகாரம் அமைச்சின் அலுவலக கட்டிடமாக ரூபா 362,238,833 ஆன மீதியொன்று காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த மீதி அமைச்சின் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றினுள் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிதியல்லாத சொத்துக்களின் கூற்றின் இறுதி மீதி ரூபா 362,238,833 இனால் குறைத்து பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியினால் சமர்ப்பிக்கப்படும் இறுதி நிதியல்லாத சொத்துக்கள் கணக்கின் அறிக்கை (SA 82) இன் பிரகாரம் அமைச்சின் நிலையான சொத்துக்களின் மீதிகள் சீராக்கம் செய்யப்பட வேண்டும். | இது ஆண்டின் இறுதியில் நடைமுறை வேலையின் கீழ் (Work in Progress) இன் கீழ் உள்ள பெறுமதியொன்றானமையால், அது அமைச்சின் நிதியல்லாத சொத்துக்களின் கீழ் உள்ளடக்கப்படவில்லை. அந்த பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உதவி சீராக்கங்களின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது குறித்த வகைப்படுத்தல் சரியாக மேற்கொள்வதற்கு குறித்து வைத்துக் கொள்ளப்பட்டுள்ளது. |

### 1.6.4 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட மாதாந்த கணக்கு பொழிப்புக்கள் மற்றும் ஏனைய தகவல்களின் பிரகாரம் வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 82,285,848 ஆன போதிலும் அது ரூபா 1,223,202,874 ஆக பதிவு செய்யப் பட்டுள்ளமையால் அந்த காசுப் பாய்ச்சல் ரூபா 1,140,917,026 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடு களிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலினுள் வைப்புப் பெறுவனவுகளை பதிவு செய்வதற்கான பகுதியொன்று ஒதுக்கப் பட்டுள்ளமையால் வைப்பு பெறுவனவுகள் வருமானமல்லாத பெறுவனவுகளில் பதிவு செய்யும் தேவைப்பாடு அவதானிக்கப்பட வில்லை. | வருமானமல்லாத பெறுவனவுகள் ரூபா 1,223,202,874 தொகையினுள் வைப்புக்களின் பெறுவனவு ரூபா 1,140,917,027 தொகை மற்றும் ஏனையபெறுவனவுகள் ரூபா 82,285,848 உள்ளடங்கும் இந்த மொத்த தொகையும் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலாகும். வைப்பு பெறுவனவுகள் நிதி செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல் அல்லாத காரணத்தினால் காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் கூடுதலாக 1,140,917,026 கூடுதலாக காட்டப்படவில்லை. |
| (ஆ) | பௌதீக சொத்துக்களின் நிர்மாணங்கள் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளினை கைப்பற்றுதல் ரூபா 367,065,885 ஆன போதிலும் அது ரூபா 4,827,052 ஆக பதிவு செய்தமையால் முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 362,238,833 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியான தரவுகள் கணக்குகள் கூற்றினுள் உள்ளடக்கப்பட வேண்டும். | ஆண்டின் இறுதியில் நடைமுறை வேலைகள் (Work in Progress) இன் கீழான் பெறுமதி ஆனமையால் அந்த தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் உதவி மாற்றல்களின் கீழ் சீராக்கப்பட்டிருந்தது. இந்த சீராக்கங்கள் 2020 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் சரியாக சீராக்கம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

### 1.6.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவு கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளது.

| அவதானிப்பு | | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104** | கொழும்பு பெரு நகரை அண்மிய நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் காணப்படும் RTC உப செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 231,409 பெறுமதியான மழை மானிகள், சூரியத் தகடுகள் மற்றும் தொடர்பாடல் உபகரணங்கள் (IoT Controller and Sollar panel with mount) 03 எண்ணிக்கையானவை 2019 யூன் 14, 26 மற்றும் யூலை 11 ஆந் திகதிகளில் காணமல் போயிருந்த போதும் அந்த நட்டங்கள் தொடர்பில் நி.பி பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்திற்கு சொந்தமான சொத்துக்களின் சேதம் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டத்தினால் கித்துல்கள, பேலியகொட மற்றும் மோதர ஆகிய பிரதேசங்களில் பொருத்தப்பட்டிருந்த மழைமானியுடனான சூரிய தட்டு மற்றும் தொடர்பாடல் 03 உபகரணங்கள் (IoT Controller and Sollar Panel with mount) காணாமல் போயுள்ளதுடன் அதன்மூலம் அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 231,409.28 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த நட்டங்கள் தொடர்பில் கொழும்பு பெரு நகரை அண்மிய அபிவிருத்தி செயற்திட்டங்களினால் அந்த உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்த பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸ் விசாரணைகள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் செயற்திட்டத்தினால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினாலும் |

| | | | |
|---|---|---|---|
| | | | முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டது. அந்த குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை செயற்திட்ட பணிப்பாளரினால் மேலதிக பணிகளுக்காக அறிவுரை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| **(ஆ) திறைசேரி சுற்றறிக்கை**<br>-------------------- | | | |
| 2016 ஜனவரி 01 ஆந் திகதிய டீஎம்ஏ/எஸ்பீ/2015/01 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை | அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள செயற்திட்ட அலுவலகத்திற்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பில் மீளாய்வாண்டினுள் மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்கள் தொடர்பில் மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | அமைச்சு மற்றும் செயற்திட்ட அலுவலகங்களில் உள்ள வாகனங்கள் தொடர்பில் 2020 ஆம் ஆண்டிற்கான மதிப்பாய்வுகள் மேற்கொள்வதற்கான சபை தற்போது நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த பணிகள் நிறைவடைந்தவுடன் உடனடியாக குறித்த அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு உரிய ஒழுங்குபடுத்தல் மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் 03 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 07 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 642,050,000 கூட்டுத்தொகையான மொத்த நிதியேற்பாடும் முழுமையாக எஞ்சியிருந்தது. | செலவின மதிப்பீடுகள் நடைமுறைக்கு பொருத்தமானதாக தயாரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தமைக்கு திறைசேரியினால் கட்டுநிதி விடுவிப்பதில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | மீளாய்வாண்டின் 14 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 125,993,000 தொகையான நிதியேற்பாடுகளில் ரூபா 22,751,339 தொகையான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. அது தேறிய நிதி ஏற்பாட்டின் 10 சதவீதம் முதல் 49 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது 19 மூலதன செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 10,236,550,000 கூட்டுத் தொகையான நிதியேற்பாடுகளில் ரூபா 5,666,278,465 தொகையான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. அது ஏனைய நிதியேற்பாட்டில் 24 முதல் 81 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 12 அபிவிருத்தி உப செயற்திட்டங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 10,058,000,000 ஆன நிதியேற்பாடுகளில் ரூபா 8,999,484,665 எஞ்சியிருந்ததுடன் அது 40 முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினை கொண்டிருந்தது. | - மேற்படி - | அவதானிப்புடன் இணங்குகின்றேன். |
| (உ) | மீளாய்வாண்டின் 06 செலவின விடயங்களுக்காக வழங்கப்பட்டிருந்த நிதியேற்பாடுகளில் 54 சதவீதமும் 90 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவில் நிதிப் பிரமாணம் 66 இன் படியான நிதியேற்பாட்டின் மாற்றல்களின் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த செலவின விடயங்களுக்காக பாதீட்டு மதிப்பீடுகளின் மூலம் நிதியேற்பாடுகளை மேற்கொள்ளல் விளைவற்றதாகியிருந்தது. | - மேற்படி - | எதிர்வுகூறலின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் மதிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது நடைமுறைப் படுத்தும் போது எழும் நடைமுறை சிக்கல்களின் அடிப்படையில் ஏற்பட்ட சில காரணமாக நிதியேற்பாடு எஞ்சியமை. |
| (ஊ) | வெளிநாட்டு நிதிய செயற்திட்டங்கள் 03 இற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 815,000,000 தொகை ஏனைய உள்நாட்டு நிதிய செயற்திட்டங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | - மேற்படி - | நிதியேற்பாடுகள் போதியதாக காணப்படாத செயற்திட்டங்களுக்கான நிதியேற்பாடுகளில் காணப்பட்ட சேமிப்புக்களில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நிதியேற்பாடு பற்றாக்குறையாக காணப்பட்ட செயற்திட்டங்களுக்கு மாற்றுதல் இடம்பெற்றுள்ளது. |

## 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2(ஈ) இன் பிரகாரம் ஏதேனும் நிதியாண்டொன்றிற்கு உரிய அனைத்து பொறுப்புக்களும் அந்த வருடத்தினுள் பணம் செலுத்தி விடுவிக்கப்பட வேண்டியதுடன் எந்தவொரு செலவினமும் அதற்கடுத்த ஆண்டில் தீர்ப்பனவு செய்யும் நோக்கத்துடன் முன்கொண்டு செல்லப்பட கூடாது. எனினும், 2019 ஆம் ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்களில் ரூபா 7,338,750,293 தொகையான பொறுப்பு மீதிகள் அவ்வாறு காண்பிக்கப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 2(ஈ) இன் பிரகாரம் செயற்பட வேண்டும். | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். போதுமான கட்டுநிதி கிடைக்காமையின் அடிப்படையில் பொறுப்புக்களை முன்கொண்டு செல்ல நேர்ந்துள்ளது. |
| (ஆ) | மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் பொறுப்புக்கள் காணப்படக் கூடாத போதிலும், 2019 ஆம் ஆண்டிற்கு உரிய நிதியேற்பாடுகள் இல்லாது காணப்பட்ட 02 செலவின விடயங்களுக்காக ரூபா 161,049,236 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். அவதானிப்புக்களின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ள குறித்த இரு செலவின விடயங்களும் வெளிநாட்டு செயற்திட்டங்களுக்கு உரியவை ஆகும். இந்த செயற்திட்டங்கள் மூலம் நிறைவேற்றப்படும் பணிகளின் காலம் பல வருடங்களுக்கு தொடரும் என்பதுடன் செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்திய பின்னர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட வருடத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளின் பற்றாக்குறையொன்று காணப்பட்ட போதிலும் செயற்திட்ட பணிகளை |

| | | |
|---|---|---|
| | | இடையில் நிறுத்துவதற்கு இயலுமை ஒன்று காணப்படவில்லை. எனவே செயற்திட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) கொழும்பு நகரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் காணப்பட்ட 04 உப செயற்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டினுள் நிறைவு செய்வதற்கு கணக்கிடப்பட்டிருந்த போதிலும் அந்த பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை துரிதமாக நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டிருந்த செயற்திட்டங்கள் சில கட்டுப்படுத்த முடியாத காரணங்களின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட காலத்தினுள் நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. |
| (ஆ) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,000,575 ஆன செலவினம் ஒன்று மேற்கொள்ளப்பட்டு செயற்திட்ட அலுவலகத்தின் பயன்பாட்டிற்காக கணக்கு வைத்தல் மற்றும் செயற்திட்ட மீளாய்வு கணனி மென்பொருளொன்று நிறுவப்பட்டிருந்த போதிலும், 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலும் அதாவது செயற்திட்ட காலம் நிறைவடைவதற்கு சுமார் 15 மாதங்கள் மாத்திரம் எஞ்சியிருந்த போது குறித்த மென்பொருள் நிறுவப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான விளைவற்ற செலவினங் களுக்காக பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியமை. | குறித்த நிறுவனத்துடன் தொடர்புபடுத்தி நிதி ரீதியான மொடியூலினை நாளதுவரையாக்கி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தவாறு உள்ளமை செயற்திட்ட பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.2 எதிர்பார்த்த அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மேல் மாகாண வலயத்திற்குரிய சமுத்திர நகர் செயற்திட்டத்தின் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டத்தை இனங்காணல், சாத்தியவள கற்கைகள் மற்றும் சுற்றாடல் தாக்கம் மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல் ஆகிய பணிகள் அமைச்சின் கீழுள்ள செயற்திட்ட ஒழுங்குபடுத்தல் மற்றும் முகாமைத்துவ அலகினால் எளிதாக மேற்கொள்வதற்கு இயலுமை காணப்பட்டது. எனினும், அந்த பணிக்காக பிறிதொரு செயற்திட்ட முகாமைத்துவ உப அலுவலகமொன்று ஆரம்பிக்கப்பட்டு பிரதி செயற்திட்ட பணிப்பாளர்கள் இருவர், மூன்று பொறியியலாளர்கள், நகர திட்டமிடல் உத்தியோகத்தர் உள்ளடங்கலாக 20 உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். அந்த செயற்திட்டத்தின் சாத்திய வள கற்கை மற்றும் சுற்றாடல் தாக்க அறிக்கை மற்றும் இறுதி திட்ட அறிக்கைகள் இதுவரை தயாரிக்கப்பட்டிராததுடன் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் மேல் மாகாண வலயத்திற்குரிய சமுத்திர நகர் அபிவிருத்தி செயற்திட்டத்தின் செயற்திட்ட அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த பதவியணிக்கு சம்பளம் செலுத்தியவாறு அலுவலகத்தினை நடாத்திச் | செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட அபிவிருத்தி பணிகளை நிறைவேற்று வதற்காக போதியளவிலான நிதியினை பெற்றுக் கொள்ளும் மூலங்களை இனங்கண்டதன் பின்னர் மற்றும் செயற்திட்டத்தின் சாத்தியவள கற்றை மற்றும் சுற்றாடல் தாக்கம் தொடர்பான அறிக்கை மற்றும் இறுதி திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் மாத்திரம் செயற்திட்ட அலுவலகம் ஆரம்பிக்கப்பட வேண்டும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் 2018 மார்ச் 19 ஆந் திகதிய DMS/777/MMWD/Project ஆம் இலக்க கடிதத்தில் மேல் மாகாண வலயத்திற்குரிய சமுத்திர நகர் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக பதவியணியினை இணைத்துக் கொள்ளுதல் தொடர்பில் கோரப்பட்டிருந்த 38 பதவிகளும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இந்த செயற்திட்டத்திற்காக மேற்படி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 20 உத்தியோகத்தர்கள் மாத்திரம் தேவையின் பிரகாரம் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.<br><br>செயற்திட்டத்திற்காக மேலே குறிப்பிடப்பட்டள்ள வாறு உத்தியோகத்தர்களை இணைத்துக் கொண்டு அவர்களின் மூலம் ஒன்றிணைந்த செயற்திட்டத்தினை உயர் தரத்துடன் அடிப்படை சாத்தியவள கற்கையொன்றினை எண்ணக்கருத் திட்டம் மற்றும் ஏனைய தேவையான அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதனால் இணைத்துக் |

செல்வதற்கு ரூபா 44,270,907 செலவிடப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக கட்டிடங்கள் வாடகை, மின்சார செலவினம் உள்ளடங்கலாக ஏனைய செலவினங்களும் கருத்தில் கொள்ளப்படுமிடத்து ரூபா 50 மில்லியனுக்கு மேற்பட்ட செலவினமொன்று இதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும், இந்த செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகளை நிறைவேற்றுவதற்காக போதியளவான நிதியினை பெற்றுக்கொள்வதற்கு இதுவரை முடியாதிருந்தது. அதனால் இந்த செயற்திட்டமும் 2020 ஒக்தோபர் 31 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டு அந்த செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பிற்கு மாற்றப்பட்டிருந்தது.

கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய போதுமான பணியின் அளவு அவர்களால் செயற்திட்டத்திற்கு கிடைத்துள்ளது. மேலும் கொள்ளுப்பிட்டி முதல் தெஹிவளை கால்வாய் வரை உள்ள கடற்கரை பிரதேச செயற்திட்டம் தொடர்பில் எந்த வெளிவாரி செலவினமும் இல்லாது செயற்திட்ட பதவியணியால் மிகவும் உயர் தரத்திலான முப்பரிமான ஒளிப்பதிவு நாடாவொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு மேல் மாகாண சமுத்திர நகர் செயற்திட்டம் மூலம் ஒப்படைக்கப்பட்டிருந்த கடமைகள் மற்றும் பொறுப்புக்களின் பிரகாரம் அந்தந்த சந்தர்ப்பத்திற்கு பொருத்தமானவாறு சாட்டப்பட்டுள்ள பணிப் பொறுப்புக்களை மேற்கொள்வதுடன் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டள்ள கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தனித்தனியாக செயற்திட்ட பணிப்பாளரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2020.10.31 ஆந் திகதி முதல் இந்த செயற்திட்டத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு அந்த செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பிற்கு மாற்றப்பட்டுள்ளது.

(ஆ) கொழும்பு நகரத்தின் அதிக வாகன நெரிசலுக்கு தீர்வொன்றினை வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்திப்பட்டிருந்த செயற்திட்டமொன்றான கொழும்பு நகர பெருநகர் போக்குவரத்து அபிவிருத்தி செயற்திட்டம் - நகர அபிவிருத்தி அலகு (3K செயற்திட்டம்) இற்காக சர்வதேச ஜப்பான் வங்கி (JICA) மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றுக்கிடையே 2007 ஆம் ஆண்டின் போது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட முழு நேர கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியிடப்பட்டவாறு காணப்பட்டது. 2015 மே மாதம் இந்த செயற்திட்டத்தினை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதுவரையிலும் JICA நிறுவனத்திலிருந்து பெற்றுக் கொள்வதற்கு இணங்கியிருந்த மொத்த பணம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அத் திகதியின் பின்னர் திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் தொடர்ந்தும் செயற்திட்ட காலத்தினை நீடிப்புச் செய்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. செயற்திட்டம் உரிய காலப்பகுதிகளினுள் நிறைவு செய்யப்படாமையின் அடிப்படையில் கடந்த 4 ½ வருடங்களினுள் திறைசேரி நிதியேற்பாடுகளில் ரூபா 110 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை செயற்திட்டத்தின் நிர்வாக மற்றும் மேவுகை பணிகளுக்காக செலவிடப்பட்டிருந்தது.

செயற்திட்டங்களை ஆரம்பிக்கும் அடிப்படை நோக்கத்தினை நிறைவேற்றியதன் பின்னர் அந்த செயற்திட்டம் உரிய காலப்பகுதியினுள் நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாக்கும்புற பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு உரிய காணிகளை அபிவிருத்தி செய்யும் பணிகள் நிறைவு செய்யப்பட்டு பேரூந்து தரிப்பிடங்களை நிர்மாணித்தல் ஆரம்பிக்கும் போது JICA நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த மொத்த பணமும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் அபிவிருத்தி பணிகளை நிறைவு செய்வதற்கு உள்நாட்டு நிதியினை வழங்குதல் அவசியமான வழங்குதல் கட்டாயமானது எனும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் குறித்த நிதியேற்பாடு அங்கீகரிக்கப்பட்டது.

ஆரம்ப நிர்மாணப் பணிகள் 2018 ஆம் ஆண்டு நிறைவடைந்ததுடன் பல்நோக்கு போக்குவரத்து நிலையத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டில் வரிசை அமைச்சினால் செயற்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அந்த அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அபிவிருத்தி பணிகளை நிறைவு செய்த பின்னர் மகாகும்புற பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தின்

போக்குவரத்து திட்டங்களை நடைமுறைப்படுத்த நேர்ந்தது.

பல்நோக்கு போக்குவரத்து நிலையத்தினை நடைமுறைப் படுத்துவதற்காக நிறுவன கட்டமைப்பு ஒன்று இல்லாதிருந்தமை, அதற்காக முறையான நிறுவன கட்டமைப்பொன்று காணப்படுதல் அவசியமானவை ஆகியவற்றின் அடிப்படையில் அதனை தயாரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளன. அந்த காலப்பகுதியினுள் செயற்பாட்டு நடவடிக்கைகளும் செயற்திட்டத்தின் மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு மும்மொழியப்பட்டுள்ளது.

உள்நாட்டு நிதியங்களின் மூலம் 2015 மே மாதம் முதல் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட துடன் ஆகக்குறைந்த ஊழியர் எண்ணிக்கை பயன்படுத்தப்பட்டு மிகவும் குறைந்த கிரயம் நிர்வாக பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

## 3.3 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாது கைவிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கொள்ளுப்பிட்டி முதல் தெஹிவளை கால்வாய் வரையிலும் உத்தேச களியாட்ட கடற்கரையினை நிர்மாணித்தல், உத்தேச துறைமுகத்தை அண்மிய செயற்பாடுகள் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றுக்காக ஹிம்புலாஎல (புளுமென்டல்) பிரதேசத்தினை அபிவிருத்தி செய்தல் மற்றும் உத்தேச வளங்கள் சேவைகள் நிலையத்தினை நிர்மாணித்தல் ஆகிய 3 பிரிவுகளை நிறைவேற்றுவதற்காக மேல் மாகாண வலய சமுத்திர நகர் அபிவிருத்தி செயற்திட்டம் நிறுவப்பட்டிருந்தது. எனினும், பல்வேறு காரணங்களால் அதன் இரண்டு பிரிவுகள் கைவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | கைவிடப்பட்ட செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொள்ளுப்பிட்டி முதல் தெஹிவளை வரையான களியாட்ட கடற்கரை நிர்மாணிப்பதற்கு சாத்தியவள கற்கையொன்று மற்றும் குறித்த அபிவிருத்தி பணிகளால் ஏற்படும் தாக்கங்களை மதிப்பீடு செய்யும் அறிக்கை (EIA) தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.<br><br>**உத்தேச துறைமுகத்தை அண்மிய பணிகள் மற்றும் அபிவிருத்திக்கான ஹிம்புலாஎல (புளுமென்டல்) பிரதேசத்தினை அபிவிருத்தி செய்வதற்காக** திட்டத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அடிப்படை சாத்தியவள அறிக்கை மற்றும் பிரதேசத்தின் போக்குவரத்து பணிகள் தொடர்பான கற்கைகள் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.<br><br>**உத்தேச வளங்கள் மற்றும் சேவைகள் நிலையத்தினை நிர்மாணித்தல்** செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் பொருத்தமானது என தேசிய கொள்கைத் திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் |

| | | | |
|---|---|---|---|
| | | | கொள்ளப்பட்டுள்ளதுடன் அதனை சுழற்சியாக நடைமுறைப்படுத்துவதற்கு உரிய அமைச்சரவையின் அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.<br>அதன் பின்னர் சுற்றாடல் / சூழல் தாக்கங்கள் தொடர்பில் கற்கைகள் அறிக்கையும் பிரதேசத்தின் போக்குவரத்து பணிகள் தொடர்பிலான கற்கைகள் அறிக்கையினையும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (ஆ) | இலகு ரயில் போக்குவரத்து கட்டமைப்பு செயற்திட்டத்தின் கீழ் யப்பானின் உதவியினை பயன்படுத்தி கொழும்பு நகரில் வீதிகளில் காணப்படும் அதிக வாகன நெரிசலுக்கு நீண்டகால தீர்வொன்றாக கம்பங்களின் ஆதாரத்துடன் மேலே ஓடும் இலகு ரயில் போக்குவரத்து கட்டமைப்பொன்றினை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டு அதன் ஆரம்ப பணிகளை நிறைவேற்றுவதற்காக JICA நிதியத்திலிருந்து ரூபா 1,791 மில்லியனும், திறைசேரி ஒதுக்கீகளில் ரூபா 573 மில்லியனுமாக ரூபா 2,364 மில்லியன் கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் இந்த செயற்திட்டத்தை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப் பட்டிருந்தமையால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் விளைவற்ற செலவினமாக மாறியிருந்தன. அவ்வாறு இந்த செயற்திட்டத்தினை கைவிட்டமை காரணமாக இலங்கை அரசிற்கு சுமார் 5 மில்லியன் நட்டஈடு செலுத்த வேண்டி ஏற்படும் என்பது வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | முறையான நிதி மற்றும் பொருளாதார மதிப்பீடொன்றின் பின்னர் ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களின் அடிப்படையில் இவ்வாறான தீர்மானங்களை எடுக்க வேண்டும். | பெறுகைகள் நடவடிக்கைகளின் பின்னர் தெரிவு செய்யப்பட்ட மதியுரை சேவை நிலையங்களின் மூலம் திட்டமிடல் இடம்பெற்று அதன் பின்னர் தற்போது உள்ள அரசினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் இந்த செயற்திட்டத்தின் பணிகள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மாலபே, ஹோமாகம, கடுவெல மற்றும் அத்துருகிரிய ஆகிய நகரங்களில் அமைந்துள்ள பிரதேசங்களில் 5 வலயங்களுக்காக அபிவிருத்தி செயற்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் 2017 மார்ச் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2023 மார்ச் 01 ஆந் திகதி நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக நிறுவப்பட்டுள்ள செயற்திட்ட முகாமைத்துவ அலகின் பதவியணியின் சம்பளம் மற்றும் படிகள் மற்றும் ஏனைய செலவினங்களாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 66,208,697 தொகையும், 2019ஆம் ஆண்டின் போது மேலும் ரூபா 48,229,253 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. எனினும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நகர அபிவிருத்தி செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் இந்த செயற்திட்டத்திற்கு பதிலாக குறித்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட செலவினம் விளைவற்ற செலவினமாக இருந்தது. | இத்திட்டம் தொடர்பில் சாத்திய வள கற்கையொன்றினை மேற்கொண்டு முதலீட்டு அச்சுறுத்தல் குறையும் வகையில் மற்றும் மக்களுக்கு நலன்கள் கிட்டும் வகையில் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும். | இந்த செயற்திட்டம் அமைச்சரவை அங்கீகாரத்தில் அடிப்படையில் நிறுவப்பட்டதாகும். அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்குரிய விடயப்பரப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்கு 04 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன அந்த செயற்திட்டங்களில் இரு செயற்திட்டங்கள் இதுவரையிலும் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 2 செயற்திட்டங்களின் பணிகள் இந்த வருடத்தினுள் நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.<br><br>எவ்வாறான போதிலும் 2020.09.30 ஆந் திகதியளவில் இந்த செயற்திட்டத்தினதும் செயற்திட்ட அலுவலகம் நிறைவு செய்யப்பட்டு செயற்திட்ட பணிகளை முன்னெடுப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

## 3.4 செயற்திட்டத்தை நிறைவேற்றுவதிலான தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பாரிய கொழும்பு திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக 2019 ஆம் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்டிருந்த பணத்தில் ரூபா 8,585,750,044 அதாவது நிதியேற்பாட்டின் 81 சதவீதம் செலவிடப்பட்டிருந்தது. எனினும், ஆண்டினுள் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த களணி கழிவு பரிமாற்று நிலையத்தினை நிர்மாணிக்கும் பணிகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 29 சதவீதமாக காணப்பட்டதுடன் அறுவக்காடு கழிவு பரிமாற்றல் நிலையத்தின் நிர்மாணம் செயன் முன்னேற்றம் சுமார் 30 சதவீதம் மாத்திரமாகும். அவ்வாறே, 2019 ஆம் ஆண்டின் போது நிறைவு செய்யப்பட திட்டமிடப்பட்டிருந்த பலாவ முதல் அறுவக்காடு முதலான புகையிரத வீதி இணைப்பினை மேம்படுத்தும் பணிகளும் திட்டமிடப்பட்டவாறு இடம்பெற்றிருக்கவில்லை. ஐக்கிய அமெரிக்க டொலர் 8,271,224 பெறுமதியான 4 புகையிரத என்ஜின் அலகுகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இறக்குமதி செய்யப்படாதிருந்த போதிலும் அதன் மூலம் கழிவினை கொண்டு செல்வதற்காக தேவையான | செயற்திட்டத்தின் ஒவ்வொரு பணிகளையும் நிறைவேற்ற வேண்டிய விதத்தினை முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றி அதன் பிரகாரம் திட்டமிட்ட காலத்தினுள் சொத்துக்களை விளைவற்று வைத்திருக்காது பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறே அரச நிதியினை விளைவற்ற விதத்தில் முதலீடு செய்வதன் மூலம் ஏற்படும் நட்டத்தினை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கழிவு அகற்றும் பணிகள் முன்னர் கொழும்பு நகரத்தில் காணப்பட்ட கழிவு அகற்றும் மாபெரும் பிரச்சினைக்கு தீர்வொன்றாக தற்காலிகமாக அந்த கழிவுகள் அறுவக்காடு கழிவு நிலையத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பின்னர் அந்த கழிவுகள் கெரவலப்பிட்டிய கழிவு நிலையத்திற்கு கொண்டு செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் அறுவக்காடு கழிவு நிலையத்திற்கு கழிவுகளை கொண்டு செல்லல் நிறுத்தப்பட்டது.<br><br>பாலாவி முதல் அறுவக்காடு வரையிலும் உள்ள புகையிரத பாதையை நிர்மாணிப்பதற்காக Insee கம்பனி மற்றும் எமக்கிடையே திட்டவட்டமான இணக்கப்பாடு ஒன்று எட்டப்படாத காரணத்தினால் அந்த பணிகளை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டது. கழிவு கொள்கலன்கள் 34 இனை கொண்டு செல்வதற்காக 2018 ஆம் ஆண்டின் போது ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் அதன் நிபந்தனையொன்றின் பிரகாரம் உற்பத்திகள் ஆரம்பிக்கப்பட வேண்டியது அதற்கான புகையிரத திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் ஆகும். உற்பத்தியாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட தொழில் நுட்ப திட்டங்களில் உள்ள |

| | | | |
|---|---|---|---|
| | 34 கழிவு கொள்கலன் மற்றும் 94 கொள்கலன் பெட்டிகளின் பெறுகை தாமதமடைந்திருந்தது. இதன் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட புகையிரத என்ஜின் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டது. | | வழுக்களின் காரணமாக அதற்காக புகையிரத திணைக்களத்தின் அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை. அதன் காரணமாக 34 கழிவு கொள்கலன்களை கொண்டு செல்வதில் தாமதமாகியது.<br><br>94 கொள்கலன் பெட்டிகளை வழங்குவதற்காக உள்ள உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ள துடன் அவை 2020 ஆம் ஆண்டின் இறுதியில் பெற உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை விநியோகித்த பின்னர் அந்த கொள்கலன் பெட்டிகளை வைப்பதற்கு பொருத்தமான இடமொன்றினை ஒழுங்குபடுத்தியிராத காரணத்தினால் அவற்றை கொண்டு வருவதனை தாமதிக்குமாறு வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், 94 கன்டெய்னர் பெட்டிகளை இந்த வருடத்தின் (2021) மார்ச் மாதம் கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | கொழும்பு நீரேந்து பிரதேசங்களினால் போஷிக்கப்பட்ட பிரதேசங்களின் வெள்ளத்தினை கட்டுப்படுத்தல், கொழும்பு தலைநகர் பிரதேசத்தின் உள்ளுராட்சி நிறுவனங்களின் இயலளவினை வலுவூட்டல், கொழும்பு நகரினை அலங்கரித்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கொழும்பு நகரினை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அந்த உப செயற்திட்டத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டிற்கென இலக்கிடப்பட்ட | குறைவான செயலாற்றலுக்கான காரணங்கள் தேடிக் கண்டறியப்பட வேண்டும். | இந்த உப செயற்திட்டங்கள் ஒன்பதில் ஏழு மாத்திரம் பாரியளவிலான செயற்திட்டங்களாவதுடன் அவற்றில் 4 செயற்திட்டங்கள் நிர்மாண மற்றும் கட்டுமான ஒப்பந்த பொதிகள் ஆகும். பாரியளவிலான செயற்திட்டங்களில் இயந்திர மற்றும் இலத்திரனியல் உபகரணங்களுக்காக கூடியளவிலான பௌதீக முடிவொன்று ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டின் இறுதியளவில் அந்த உதிரிப்பாகங்களின் ஒரு பகுதி மாத்திரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. அதன் காரணமாக எதிர்பார்க்கப்பட்ட பௌதீக |

| | | | |
|---|---|---|---|
| | 09 உப செயற்திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் ரூபா 8,676 மில்லியன் (94%) செலவிடப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட செயன்முன்னேற்றம் 0 முதல் 60 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சினை கொண்டிருந்தது. | | செயற்முன்னேற்றத்தை அடைந்து கொள்ள முடியாமைக்கு தாக்கமளித்த ஒரு காரணமாகும். அவ்வாறே, 2019.04.21 ஆந் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தீவிரவாத தாக்குதலின் பின்னர் ஏற்பட்ட தடைகளும் நேரடியாக செயன்முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தமைக்கு தாக்கமளித்த காரணமாகும். |
| (இ) | பொது போக்குவரத்து சேவைகளின் மேம்படுத்துவதற்காக பேருந்து சேவையினை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டினுள் கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களில் பேருந்து போக்குவரத்து நிறைகளை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் இறுதியில் 40 கிலோமீற்றர் ஓட்ட நிறைகளுக்காக மாத்திரம் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்த தொகையில் ரூபா 571.14 மில்லியன் அதாவது 71 சதவீதமான பணம் செலவிடப்பட்டிருந்தது. கடவத்த பல்ஊடக போக்குவரத்து நிலையத்தினை நிர்மாணித்தல் - கட்டம் 2 இற்காக 172,769,315 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் குறித்த நிர்மாண ஒப்பந்தத்தினை நிறுவனமொன்றிற்கு கையளிக்கும் பணிகள் மாத்திரம் நிறைவு | திட்டமிடப்பட்ட பணிகளை உரிய காலத்தினுள் நிறைவு செய்ய வேண்டும். | இந்த செயற்திட்டத்தின் மூலம் பிரதானமாக பின்வரும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது.<br><br>1. பேருந்து போக்குவரத்து நிறைகளை நடைமுறைப்படுத்தல்.<br><br>2. கடவத்த பல்ஊடக போக்குவரத்து நிலையத்தினை நிர்மாணிக்கும் கட்டம் 1 மற்றும் கட்டம் 2.<br><br>3. பொல்துவ கிளை வீதியினை நிர்மாணிக்கும் கட்டம் 3.<br>4. அரச மற்றும் தனியார் முதலீடுகளின் மூலம் இலகு புகையிரத செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்<br><br>அதன் பிரகாரம் இதுவரையிலும் பொல்துவ கிளை வீதி கட்டம் 3 இன் கீழ் நிர்மாணப் பணிகளின் இறுதிக் கட்டத்தில் உள்ளதுடன் கடவத்த பல்ஊடக போக்குவரத்து நிலையத்தினை நிர்மாணிக்கும் பணிகளும் |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்தன. பொல்துவ கிளை வீதியினை நிர்மாணிக்கும் கட்டம் - III இற்காக ரூபா 445,716,038 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதனை நிறைவு செய்ய முடியாதிருந்தது. எவ்வாறான போதிலும் மீளாய்வாண்டின் 2019 ஆம் ஆண்டின் போது இந்த செயற்திட்டத்தின் பதவியணிக்கு சம்பளம் மற்றும் ஏனைய செயற்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவினங்களுக்காக ரூபா 51.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | | இறுதிக் கட்டத்திற்கு வந்துள்ளது. அவ்வாறே அரச மற்றும் தனியார் முதலீடுகளினால் இலகு புகையிரத செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய முதலீட்டாளர்களை தெரிவு செய்யும் நடைமுறையிலும் சில மாற்றங்களுக்கு உட்பட்டு இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப் படுகின்றது. |

## 3.5 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றத்தை பெற்றிராத செயற்திட்டங்கள்

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் விமான நகர் செயற்திட்டம் மற்றும் நிர்வாக நகர் செயற்திட்டம் ஆகிய இரு செயற்திட்டங்களினதும் பதவியணி சம்பளம் மற்றும் ஏனைய மீண்டெழும் செலவினங்களுக்காக 2018 ஆம் ஆண்டினுள் ரூபா 80.7 மில்லியன் மற்றும் 2019 ஆம் ஆண்டினுள் ரூபா 29.13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் அந்த செயற்திட்டம் தொடர்பில் முறையான சாத்தியவள கற்கையொன்று அல்லது செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதால் ஏற்படும் சுற்றாடல் தாக்கங்களின் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 02 செயற்திட்டங்கள் திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றுவதற்கான | செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கு முன்னர் அந்த செயற்திட்டங்கள் தொடர்பில் முறையான சாத்தியவள கற்கையொன்றினை மேற்கொள்ள வேண்டியதுடன் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்து வதால் ஏற்படும் சுற்றாடல் தாக்கங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். மேலும், முதலீட்டாளர்களை இனங்காணாது செயற்திட்டத்தை ஆரம்பிக்கக் கூடாது. | இந்த இரு செயற்திட்டங்களும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட செயற்திட்டங்களாகும். அந்த இரு செயற்திட்டங்களின் மூலம் அடிப்படை செயற்திட்ட திட்டமிடல் பணியினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் எதிர்பார்த்தவாறு நிறைவேறாத காரணத்தால் செயற்திட்ட அலுவலகம் 2020.09.30 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டுள்ளது. அந்த செயற்திட்டங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்ட பணிகளை முன்னோக்கி |

| | | |
|---|---|---|
| முதலீட்டாளர்களை இனங்கண்டிராமையால் இந்த செயற்திட்டங்களும் முழுமையாக திறைசேரியின் நிதியின் மீது தங்கியிருந்ததுடன் முறையான திட்டமொன்று இல்லாது மிகவும் மந்தமான முறையில் இடம்பெற்றவாறு இருந்தது. இந்த அறிக்கை வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில் இரு செயற்திட்டங்களையும் இடைநிறுத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | | நடைமுறைப்படுத்துவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

## 3.6 தாமதித்து பணிகளை ஆரம்பித்த செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொழும்பு தலைநகரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் பாரியளவிலான நிர்மாணங்கள் தொடர்பிலான உப செயற்திட்டங்கள், அந்த செயற்திட்டத்தினை இடைநடுவில் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய பணிகளை மேற்கொள்ளாது 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த பின்னர் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக ஒட்டுமொத்த செயற்திட்டமும் உரிய காலத்தில் நிறைவேற்ற முடியாதிருந்த காரணத்தினால் செயற்திட்ட காலத்தை நீடிப்புச் செய்ய நேர்ந்திருந்தது. அவ்வாறே, கூறு 01 இன் கீழ் காணப்பட்ட 35 உப செயற்திட்டங்களில் 12 உப செயற்திட்டங்கள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாணப் கட்டத்தில் காணப்பட்டதுடன் தொடர்ந்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாக காணப்பட்ட இதன் அனைத்து உப செயற்திட்டங்களும் பாரியளவிலான செயற்திட்டங்களாகும். இந்த உப செயற்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட | சிறந்த கண்காணிப்பின் கீழ் உரிய காலத்தினுள் உப செயற்திட்டங்களை துரிதமாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த செயற்திட்டத்தின் முதல் கட்டமானது கற்கை பணிகளை மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலம் பொருத்தமான உப செயற்திட்டங்களை இனங்காணல் என்பதாகும். அதன்பின்னர் உப செயற்திட்டங்களுக்கு தேவையான காணிகளை சுவீகரிப்பதுடன் மீள குடியமர்த்துதல் ஆகியன உப செயற்திட்டங்களுக்கு விசேடமான சுற்றாடல் மற்றும் சமூக கற்கைகளை மேற்கொள்ளல் இடம்பெற்றது. இதற்காக கவனத்தில் கொள்ளக் கூடிய அளவிலான காலம் கடந்தது. அந்த பணிகள் செயற்திட்டத்தினை அங்கீகரித்து உப செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டதன் பின்னரே மேற்கொள்ளப்பட்டன. |

மொத்த ஒப்பந்த கிரயம் சுமார் ரூபா 15,865 மில்லியன் ஆகும்.

இவ்வாறு இனங்காணப்பட்ட பாரியளவிலான உப செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் பின்பற்ற வேண்டிய முக்கியமான சில நடைமுறைகள் உள்ளன. அதாவது ஆரம்பத்தில் அரச மற்றும் உலக வங்கியின் பெறுகைகள் நடைமுறையினை பின்பற்ற வேண்டியதுடன் செயற்திட்டத்தின் தன்மைக்கேற்ப நீர் விஞ்ஞான மற்றும் புவிச்சரிதவியல் ஆய்வினை மேற்கொண்டதன் பின்னர் விரிவான திட்டங்களை தயாரிக்க வேண்டும். அவ்வாறே இவ்வாறான பல செயற்திட்டங்களின் அடிப்படை, அமைப்புக்கள் (Bed Rock) வரையிலும் செல்கின்றமையால் புவிச்சரிதவியல் ஆய்வுகளின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட அவதானிப்புக்களின் அடிப்படையில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறே இந்த பாரியளவிலான செயற்திட்டங்கள் கொழும்பு நகரை அண்டிய மிகவும் சன நெரிசல் மிக்க இடங்களில் அமைந்துள்ளமையால் காணிகளை சுவீகரிக்கும் நடைமுறையின் போது பொதுவான நடைமுறைகளிலிருந்து விலகி செயற்பட நேர்ந்தது. காணிகளை சுவீகரித்தல், மீளக் குடியமர்த்தல் குழுவின் (LARC) மற்றும் காணிகளை சுவீகரிக்கும்

போது மீள அமர்த்துவதற்கு உரிய விசேட குழுவின் (Super LARC) நடைமுறைகளுக்கு அமைய பணிகளை மேற்கொள்ளநேர்ந்தது. அவ்வாறே பாரியளவிலான செயற்திட்டங்களின் நிர்மாணப் பணிகளுக்காக உரிய அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு இந்த அத்தியாவசிய கற்கைகள் மற்றும் காணிகளை சுவீகரித்தல் பணிகள் நிறைவு செய்ததன் பின்னரே இலகுவாக இருக்கும்.

## 3.7 ஏனைய அவதானிப்புக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மேல் மாகாண வலயத்தின் மாநகர திட்டமிடல் செயற்திட்டம் 2015 மே மாதம் ஆரம்பிக்கப்பட்டதுடன் அது 2017 செப்தெம்பர் மாதம் இறுதி வரையிலும் சுமார் 02 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா 330,226,769 ஆகும். எவ்வாறான போதிலும், 2018 ஆம் ஆண்டினுள் ரூபா 10,224,492 மற்றும் 2019 ஆம் ஆண்டினுள் 19,453,589 தொகை செயற்திட்ட பதவியணிக்கு சம்பளம் மற்றும் படிகள், செயற்பாட்டுசெலவினமாக மேற்கொள்ளப்பட்டு மேல்மாகாண வலய திட்டமிடல் செயற்திட்டம் எனும் பேரிலான புதியசெயற்திட்டமொன்றாக பழைய செயற்திட்டமே முன்னெடுக்கப்பட்டிருந்தது. 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதி இந்த | செயற்திட்டத்தை நிறைவு செய்யும் காலச்சட்டகம் செயற்திட்டத்தின் மூலம் மேற்கொள்ள வேண்டிய விசேட பணிகள் அல்லாது செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப் பட கூடாது என்பதுடன் வலய நகர அபிவிருத்திக்காக திட்டமிடப்பட்டுள்ள போது அந்த திட்டங்கள் பிரசித்தி படுத்தப்பட வேண்டும். | அமைச்சரவையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த திட்ட செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள் ளது. இந்த செயற்திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்ட பின் அந்த செயற்திட்ட பணிகள் குறைக்கப்பட்டு சிறு பதவியணியின் மூலம் மாநகர திட்டமிடல் மூலம் இனங்காணப்பட்ட செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கு தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல் அந்த பதவியணியின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறே ஏனைய மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் |

| | | |
|---|---|---|
| செயற்திட்டத்தினையும்முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | | நிறுவப்பட்ட செயற்திட்டங்களை நிறைவு செய்வதுடன் இதுவரையிலும் இந்த திட்ட செயற்திட்டமும் நிறைவு செய்யப்பட்டு செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டள்ளது. |

## 3.8 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உலக வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி முதலீட்டு வங்கி (AIIB) இணைந்ததாக பாரிய கொழும்பு திண்டக் கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக ஐக்கிய அமெரிக்க டொலர் 700,000 ஆன நிதி உதவியினை வழங்க இணங்கியுள்ளமையால் அதில் ஐக்கிய அமெரிக்க டொலர் 200,000 ஆன தொகை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும் அறுவக்காடு கழிவு சேகரிப்பு நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு உலக வங்கியின் பரிந்துரைக்கமைய பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய வேண்டிய தவறியமையின் அடிப்படையில் இலங்கை அரசிற்கு உலக வங்கி உதவியினை வழங்குவதற்கு மறுத்திருந்தது. அதன் காரணமாக செயற்திட்டத்தின் எஞ்சிய அனைத்து செலவினத்தையும் இலங்கை அரசின் நிதியின் அடிப்படையில் மேற்கொள்ள நேர்ந்திருந்தது. | மீளவும் வெளிநாட்டு உதவியினை பெற்றுக் கொள்ளக் கூடிய வழிமுறையொன்றினை பின்பற்றி செயற்திட்டத்தின் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கும் நோக்கங்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த கழிவு நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு நிதி உதவியினை வழங்குவதற்கு உலக வங்கி முதலில் இணக்கப்பாட்டினை வழங்கியிருந்த போதிலும் பின்னர் நிதியளிப்பதற்கு மறுத்த காரணத்தினால் இந்த செயற்திட்டத்தின் பணிகளை இலங்கை அரசின் நிதியேற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிப்பதற்கு நேர்ந்துள்ளது. |

(ஆ) கொழும்பு தலைநகரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக கடன் வழங்கும் வெளிநாட்டு நிறுவனத்தினால் ரூபா 27,890.22 மில்லியகுக்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 213 மில்லியனான கடன் வழங்குவதற்கு இணக்கப்பாடு தெரிவித்து 2012 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 7 ½ வருடங்கள் கடந்த பின்னரும் பயன்படுத்தப்பட்ட மொத்த கடனின் அளவானது ரூபா 22,224.24 மில்லியனுக்கு சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 144.59 மில்லியன் மாத்திரம் ஆகும். 2017 யூன் 30 ஆந் திகதியளவில் இந்த செயற்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்ய உத்தேசிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டம் மந்த கதியில் செயற்படுத்தப்பட்டமை செயற்திட்டத்தின் உப கூறுகளின் குறைவான செயலாற்றல் ஆகியவற்றின் காரணத்தால் செயற்திட்டத்தின் நடைமுறைப்படுத்தும் காலமானது நான்கு சந்தர்ப்பங்களில் நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி இந்த செயற்திட்டத்தினை நிறைவு செய்ய நிர்ணயிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மொத்தக் கடன் தொகையில் 67 சதவீதமான பணம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

உரிய காலப் பகுதியினுள் செயற்திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவு செய்து நிதி ஏற்பாடு செய்யப்பட்ட பணத்தை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு இடம்பெற்றமைக்கு செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் போது ஏற்படும் எதிர்பாராத இந்த செயற்திட்டத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் பட்ட விடயங்கள் காரணமாக அமைந்திருந்தது.

(அ) கொலன்னாவ கால்வாய் திருப்பல் செயற்திட்டம் தொடர்பில் பிரதேசவாசிகள் மற்றும் அரசியலில் ஈடுபட்டுள்ளோரால் ஏற்பட்ட எதிர்ப்புகள்

(ஆ). பாரியளவிலான உப செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள பணிகள் செயற்திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டு உப செயற்திட்டங்கள் இனங்காணப்பட்டதன் பின்னரே பணிகளை மேற்கொள்ள நேர்ந்தமை.

(இ). 2019.04.21 இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட தடங்கல்கள் போன்ற காரணங்களால் செயற்திட்டத்தின் குறைப்பயன்பாட்டிற்கு தாக்கமளித்திருந்தது.

## 3.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் மற்றும் செயற்திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்படும் சமூக மற்றும் பொருளாதார பணிப்பொறுப்பு தொடர்பான மக்களுக்கு தெளிவுபடுத்தும் பிரச்சார நிகழ்ச்சித்திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்காக அதிக கிரயத்துடனான வெளிவாரி விளம்பர நிறுவனமொன்றின் சேவையினை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் பணத்தை பெற்றுக்கொண்டு ரூபா 98,680,879 ஆன தொகை செலவிடப்பட்டு தனியார் நிறுவனமொன்றிடம் குறித்த பணி நிறைவேற்றப்பட்டிருந்தது. எனினும், அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு அபிவிருத்தி பணிகள் மற்றும் அதில் மக்களுக்கு கிடைக்கும் நலன் தொடர்பில் பிரச்சாரம் செய்வதற்கும் பதிலாக "யக்கட மினிசா" எனும் கருப்பொருளின் கீழ் பிரச்சாரம் இடம்பெற்றிருந்தது. செலவிடப்பட்ட பணத்தினால் மக்களுக்கு கிடைத்துள்ள நலன் தொடர்பான சான்றுகள் எதுவும் காணப்படவில்லை. அதன் | அமைச்சினால் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டியமை தொடர்பில் ஆராய்ந்து பிரச்சார செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும். | மநாகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் வருடாந்தம் ரூபா 50 பில்லியனுக்கு மேலதிகமான அளவினை ஈடுபடுத்தி அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்படுவதுடன், அது தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் அரச பெறுகைகள் முறைமையை பின்பற்றி அனைத்துஅ செயற்திட்டங்கள் தொடர்பிலுமான தெளிவூட்டல் நிகழ்ச்சித்திட்டமொன்று திட்டமிடப்பட்டிருந்தது.<br><br>அதன் பிரகாரம், பெறுகைகள் முறையினூடாக தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களினூடாக மேற்கொள்ளப்படும் பணிகளின் செயன்முன்னேற்றத்தின் பிரகாரம் குறித்த நிறுவனங்களுக்கு இதுவரையிலும் ரூபா 78 மில்லியனுக்கு அண்மிய பணம் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறான போதிலும், புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இது தொடர்பில் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக இந்த விளம்பர செலவினம் சிக்கனமற்ற செலவினமொன்றாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட விமான நகர செயற்திட்டத்தின் (Aero City Development) பயன்பாட்டிற்காக, அந்த செயற்திட்டத்தின் மூலம் செத்சிறிபாய II ஆம் கட்டத்தின் கட்டிடங்களின் ஒரு பகுதியை ஒதுக்குவதற்கு ரூபா 2,642,073 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், பின்னர் அந்த செயற்திட்டத்தினை செத்சிறிபாய கட்டிடத்திற்கு கொண்டு செல்வதற்கான எண்ணம் கைவிடப்பட்டமையால் அந்த செயற்திட்டத்துடன் எந்தவொரு தொடர்பும் இல்லாதிருந்தமையால் மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது பணிகளை நிறைவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த கொழும்பு தலைநகரை அண்மித்த அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு அது கையளிக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 2,642,073 ஆன செலவினம் அந்த செயற்திட்டத்தின் மூலம் விளைவற்ற விதத்தில் செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த சிக்கனமற்ற செலவினங்களை மேற்கொள்ளல் தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொழும்பு தலைநகரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டம் 2018ஆம் ஆண்டின் போது பணிகளை முடிவுறுத்த உத்தேசித்திருந் போதிலும், செயறதிட்டம் எதிர்பார்த்த செயலாற்றலினை அடைந்திராமையால் காலத்தை நீடிப்ப செய்வதற்கு தேவையான விடயமொன்றாக திட்டமிடப்பட்டிருந்தது. அந்த திட்டத்தின் பிரகாரம் பதவியணிக்காக மேலதிக அலுவலகங்களை ஒதுக்கீடு செய்யும் தேவைப்பாடு நிலவியது.<br><br>சிரேஷ்ட பொறியியலாளர், நிபுணத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் பொறியியலாளர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பொன்று இடம்பெற்றிருந்தமையும், கூட்ட அறைக்காக இடமொதுக்குதலும், சிறிய அளவிலான பதிவேட்டறையொன்று மற்றும் களஞ்சியமொன்றின் தேவைப்பாடு காணப்பட்டமையும், செயற்திட்டத்தின் உடைந்த பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்கும் தேவையான இடம் காணப்படாமையால் இந்த மேலதிக அலுவலக இடம் பெற்றுக்கொள்ளப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பாரிய கொழும்பு வெள்ளநீர் கட்டுப்பாட்டு செயற்திட்டத்தின் கீழ் தியவன்னாவ ஆற்றினை அகலமாக்குவதற்கு தேவையான காணிகளை மாத்திரம் சுவீகரித்தல், சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையினை மதிப்பீடு செய்தல் மற்றும் நட்டஈடு செலுத்துவதை துரிதமாக்குவதற்காக குறித்த நிறுவனங்களுக்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக சுவீகரிக்கப்பட்டிருந்த காணியொன்றுக்குரிய உரித்தினை கோரியுள்ள வெளிநாட்டுக் கம்பனியொன்றினால் நட்டஈட்டு கொடுப்பனவு தாமதமடைந்திருந்த காரணத்தால் முரண்பாடுகளை தீர்ப்பனவு செய்யும் சர்வதேச நிலையத்தில் இலங்கை அரசிற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்தது. தொடுக்கப்பட்ட வழக்கிற்காக வெளிநாட்டு சட்ட ஆலோசகர்களின் உதவியினை பெற்றுக்கொள்வதற்காக மற்றும் அதற்காக ஆஜராகியிருந்த சட்டமா அதிபர் திணைக்கத்தின் உத்தியோகத்தர்களின் வெளிநாட்டு பயணங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அமைச்சினால் ரூபா 314,783,613 ஆன தொகை செலவிடப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்டவாறு தேவையான காணிகளை மாத்திரம் சுவீகரித்தல், சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையினை மதிப்பீடு செய்தல் மற்றும் நட்டஈடு செலுத்துவதை துரிதப்படுத்தல் போன்ற பணிகளுக்காக குறித்த நிறுவனங்கள் போதியளவு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த காணிக்குரிய பிரச்சினையான காணித்துண்டு நீரோந்துப் பிரதேசமாக வைப்பதற்கு அந்த கூட்டுத்தாபனத்தினால் 2000.07.05 ஆந் திகதிய கடிதத்தில் இந்தக் காணியின் ஆரம்ப அபிவிருத்தியாளரான இலக்ரோ ஹொலிடே ரெசோட் லிமிடட் நிறுவனத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான போதிலும், 2010ஆம் ஆண்டின் போது அந்த கூட்டுத்தாபனத்தினால் நீரோந்துப் பிரதேசமாக வைப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்ட காணியின் அளவினை மொன்டிரோஸ் கம்பனிக்கு மேற்குறிப்பிட்ட கம்பனியால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.<br><br>அதன் பிரகாரம், மேற்படி காணிக்காக குறித்த நிறுவனத்தினால் GBP 338,162.34 ஆன தொகை காணியின் நட்டஈடாக கோரி தொடுக்கப்பட்ட ABR/16/25ஆம் இலக்க வழங்கின் தீர்ப்பு 2020.03.05ஆந் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம், இலங்கை குடியரசினால் எடுக்கப்பட்ட ஆரம்ப எதிர்ப்பின் பிரகாரம் மொன்டிரோஸ் டிவளப்மன்ட் (தனியார்) கம்பனி தொடுத்திருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு இலங்கைக்கு சார்பாக |

| | | |
|---|---|---|
| | | வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது.<br><br>எவ்வாறான போதிலும், குறித்த நிறுவனத்தினால் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதுடன், அதற்காக அண்ணளவாக ஐ.அ.டொலர் 1.45 மில்லியன் செலவாகக்கூடும் என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>தற்போது மேன்முறையீட்டுக்காக இலங்கை அரசினால் முன்வைக்கப்பட்ட மேன்முறையீட்டிற்கான தீர்ப்பும் இலங்கை அரசிற்கு சாதகமான முறையில் வழங்கப்பட்டுள்ளது. |

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு<br>------------------------------------- | பரிந்துரை<br>------------------------ | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை<br>----------------------------- |
|---|---|---|---|
| (அ) | ஒப்பந்த அடிப்படையில் கொழும்பு தலைநகரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் பெறுகைகள் நிபுணர் பதவியில் சேவையாற்றிய உத்தியோகத்தருக்கு காலநிதிப் பட்டத்தினை பின்தொடர்வதற்காக பாடநெறிக் கட்டணமாக செயற்திட்ட நிதியத்திலிருந்து ரூபா 150,000 தொகை | சட்டரீதியற்ற கொடுப்பனவுகளுக்காக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடம் குறித் பணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொழும்பு தலைநகரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் பெறுகைகள் நிபுணர் டபிள்யூ.சீ.பீ. ஆரியதாச அவர்கள் பட்டப்பின் படிப்பு கற்கையொன்று (Msc Construction Law & Dispute Resolution) பின்பற்றுவதற்காக செயற்திட்டத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | சட்டத்திற்கு முரணாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த பணத்தை அறவீடு செய்வதற்கான உரிய நடவடிக்கைகள் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நிதியினூடாக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இந்த உத்தியோகத்தர் இலங்கை கடற்படையில் இரட்டை அடிப்படையில் இந்த சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். மேலும், அந்த உத்தியோகத்தருக்கு இதற்கு முன்னர் இலங்கை கடற்படையில் சேவையில் ஈடுபட்டிருந்த போது எந்தவொரு பட்டப்பின் கற்கைக்கும் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>இது தொடர்பில் 2019.06.07ஆந் திகதி பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுவிற்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் எதிர்காலத்தில் இது தொடர்பில் கலந்துரையாடி மேற்படி நடவடிக்கை எடுப்பதற்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2011 திசெம்பர் 24ஆந் திகதி 46ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு முரணாக கொழும்பு தலைநகரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின், பகுதியளவு செயற்திட்ட பதவியணிக்காக 1/3 ஆன படியொன்றினை செலுத்தும் போது அதற்கான ஏனைய படிகள் நீங்கலாக உத்தியோகத்தர்களின் செயற்திட்ட பதவிகளுக்குரிய அடிப்படைச் சம்பளத்தினை அடிப்படையாக கொள்ள வேண்டும். எனினும், | கூடுதலாக செலுத்தப்பட்டுள்ள தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொழும்பு தலைநகரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்தின் 1/3 ஆன படியொன்றினை செலுத்தும் போது, இந்த உத்தியோகத்தருக்கு உரி படிகளும் உள்ளடக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் கண்காய்வு ஐயவினாக்களின் மூலம் தெரிவிக்கப்பட்டதன் பின்னர், அது தொடர்பில |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படைச் சம்பளம் மற்றும் ஏனைய படிகள் உள்ளடங்களாக 1/3 ஆன படி கணிப்பிடப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டமையால் பகுதிநேர செயற்திட்ட ஊழியர்களுக்கு ரூபா 10,832,729 ஆன தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறன போதிலும் அந்த பணத்தை அறவீடு செய்வதற்கு அமைச்சினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | சுற்றறிக்கை வெளியிட்டுள்ள முகாமைத்து சேவைகள் திணைக்களத்திடம் விசாரிக்காது மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 2016.07.26ஆந் திகதிய அந்த திணைக்களத்தின் தெளிவுபடுத்தலுக்கமைய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 33 இன் பிரகாரம், ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறான போதிலும், முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2016 இன் ஏற்பாடுகளுக்கமைய குறித்த கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாதென குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அந்த கொடுப்பனவுகள் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2016 இன் பிரகாரம் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | கொழும்பு நகர் போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் கடவத்தை, கடுவலை, கொட்டாவ நகரங்களின் அபிவிருத்திக்காக மாத்திரம் 3K செயற்திட்டம் எனும் பெயரில் முன்னெடுக்கப்பட்ட செயற்திட்டத்தின் கிரயம் தவறாக புரிந்துகொள்ப்பட்டு பதவியணியின் 10 பேருக்கு அவர்கள் இதுவரையிலும் பெற்ற சம்பளத்தை விட கூடுதலான சம்பளமொன்றை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தினை பெற்று, | தவறான தகவல்களை சமர்ப்பித்து தகவல்களை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களிடமிருந்து அந்த பணத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த சம்பளத்தை செலுத்துதல் தொடர்பில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினூடாக பெற்றுக்கொள்ளப்பட்ட தெளிவுபடுத்தல்களுக்கு இணங்க DMS/7777/GCVT ஆம் இலக்க 2017.10.02ஆந் திகதி கடிதத்தின் மூலம் இது தொடர்பான தெளிவுபடுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 3K செயற்திட்டத்திற்காக தனியானதொரு பதவியணி அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும், முகாமைத்துவ |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை மீறும் வகையில் சம்பளமாக ரூபா 1,906,200 ஆன தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த தவறுதலான கொடுப்பனவுகளை அறவீடு செய்வதற்கு அமைச்சினால் இதுவரையிலும் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் கிரயத்தினை அடிப்படையாக கொண்டு சம்பளம் செலுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 2008 யூன் 26ஆந் திகதிய 13/2008ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 மற்றும் 05 ஆம் பந்திகளுக்கு முரணாக அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் (நகர அபிவிருத்தி) இனால் போக்குவரத்து படியாக ரூபா 50,000 பெற்றுக்கொள்ளப்பட்டு செயற்திட்டங்களின் வாகனங்களை கடமைகள் மற்றும் தனிப்பட்ட பயணங்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. அதன் காரணமாக அவரால் போக்குவரத்து படிகளாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 340,000 தொகையை குறித்த உத்தியோகத்தரிடமிருந்து மீள அறவிடப்பட வேண்டிய போதிலும், அந்த தொகையில் ரூபா 150,000 மாத்திரம் மீள அறவிடப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 190,000 தொகையினை அறவிடுவதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த கொடுப்பனவுகள் சட்டத்திற்கு முரணான கொடுப்பனவுகள் என்பதால், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அந்த பணத்தை துரிதமாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பரிந்துரை செய்யப்படுகின்றது. | அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளரிடமிருந்து மீள அறவிடப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்ட ரூபா 340,000 தொகையில் ரூபா 150,000 தொகை 2017.01.17ஆந் திகதி அரசிற்கு மீள செலுத்தப்பட்டுள்ளது.அது தொடர்பில் அரச கணக்குகள் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2019.06.07ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்றத்தின் அரச கணக்குகள் குழுக் கூட்டத்தின கூட்டக் குறிப்புகளின் மூலம் இது தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை 2020.08.21ஆந் திகதிய MUD/F/8/AQ/COPA – Vol III மற்றும் 2020.08.21ஆந் திகதி கடிதத்தின் மூலம் அரச கணக்குகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் பிரகாரம் அரசாங்க கணக்குகள் குழுவிலிருந்து கிடைக்கும் அறிவுரைகளுக்கமைய மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அமைச்சின் முன்னாள் செயலாளர் மற்றும் மேலதிக செயலாளர் (நகர அபிவிருத்தி) ஆகியோரின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக எரிபொருள் படிகளை பெற்றுக்கொண்டவாறு உள்ளதுடன், அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இரு செயற்திட்டங்களிலிருந்தும் 01/2016ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு முரணாக எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. 2015ஆம் ஆண்டு முதல் 2016 திசெம்பர் வரையிலும் அமைச்சின் செயலாளரின் வாகனத்திற்காக ரூபா 288,200 தொகையும், அவ்வாறே மேலதிக செயலாளர் (நகர அபிவிருத்தி) இன் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக ரூபா 465,080 பெறுமதியான எரிபொருள் சுற்றறிக்கைக்கு முரணாக பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த பெறுமதிகளை அறவிடுவதற்கு அமைச்சு இதுவரையிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு முரணாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள எரிபொருளின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 05/2016 சுற்றறிக்கையின் விடயங்களுக்கு முரணான போதிலும், உத்தியோகத்தரால் குழாம் வாகனங்களுடன் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள எரிபொருள் கள பணிகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2020.08.21ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அரச கணக்குகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் பிரகாரம் அரசாங்க கணக்குகள் குழுவினால் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கமைய மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளது. |

## 3.11 முறையற்ற விதத்திலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாது, ரூபா ஒரு மில்லியனான மாதாந்த மிகையூதியத்தின் அடிப்படையில் கொழும்பு | திட்டவட்டமான நோக்கங்களுடன் மற்றும் மாற்றுவழிகள் தொடர்பில் கவனம் செலுத்தி குறைந்த செலவினத்தில் | உலக வங்கியின் ஆலோசனைக்கமைய பெறுகை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. உடன்படிக்கையின் பிரகாரம் மதியுரைக் கட்டணம் |

| | | | |
|---|---|---|---|
| | மாநகரை அண்மித்த நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு இலங்கை ஆலோசகர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், கடந் 03 வருட காலப்பகுதியினுள் அந்த மதியுரையாளருக்கு ரூபா 37.16 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. இந்த உத்தியோகத்தரின் செயலாற்றல் தொடர்பில் ஒவ்வொரு வருடத்தின் இறுதியிலும் மதிப்பீடொன்றை மேற்கொண்டு சேவை நீடிக்கப்பட்டிராததுடன், பொதுவான நடைமுறையிலிருந்து விலகி 03 வருடங்களுக்கு ஒரே தடவையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. | நோக்கத்தை அடைந்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். முறையான அங்கீகாரமின்றி ஊதியம் செலுத்தப்படக்கூடாது என்பதுடன், உரிய முறையில் செயலாற்றல் மதிப்பீடு செய்யப்பட்டு சேவை நீடிப்பு செய்யப்பட வேண்டும். | செலுத்தப்பட்டுள்ளது. அதன் காரணமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் அவசியமற்றது. |
| (ஆ) | துறைமுக நகர் செயற்திட்டத்திற்கான பதவியணியை அங்கீகரிக்கும் போது, 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள் அவசியமென்று காரணங்களை குறிப்பிட்டு 02 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றினை பின்பற்றாது, செயற்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு ஆகிய ஒரே பணிகளுக்கு அமைச்சின் இரு உத்தியோகத்தர்கள் பகுதி நேர அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர். 2016 திசெம்பர் முதல் 2019 திசெம்பர் வரையிலும் 03 வருடங்களும் மாதமொன்றிற்காகவும் அந்த உத்தியோகத்தருக்காக ரூபா 4,018,332 தொகை படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. அத்துடன், அந்த உத்தியோகத்தர்கள் துறைமுகநகர் | அமைச்சினால் செயற்திட்ட ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு ஆகிய ஒரே பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அது அமைச்சின் பதவியணி உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். | கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினாவிற்கமைய அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| செயற்திட்டத்தில ஈடுபட்டமைக்கான வருகை மற்றும் வெளிச்செல்லல் அறிக்கைகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. பகுதி நேரம் அந்த செயற்திட்டத்தில் பணியாற்றிய இந்த இரு உத்தியோகத்தர்களுக்கு முழு நேர அடிப்படையில் குறித்த செயற்திட்டத்தின நிரமாணக் கம்பனியால் வாடகை அடிப்படையில் வாகனமொன்று வழங்கப்பட்டிருநுந்ததுடன், அந்த வாகனத்திற்காக 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் செலுத்தப்பட்டிருந்த மொத்த தொகை ரூபா 6,314,400 ஆகும். | | |

## 3.12 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 ஏப்ரல் மாதத்தின் போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சினால் 4 வாகனங்கள் செயற்பாட்டுக் குத்தகை அடிப்படையில் துறைமுக நகர அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதன் ஒரு வாகனம் செயற்திட்டப் பணிப்பாளருக்கு ஒதுக்கப்பட்டு, அந்த வாகனத்திற்காக எரிபொருள் படிகளும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், செயற்திட்ட பணிப்பாளரால் துறைமுக நகர அபிவிருத்தி செயற்திட்டக் கம்பனியிடமிருந்து வாகனமொன்று பெறப்பட்டு இரு வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அவ்வாறே, செயற்திட்டத்தின் பிரதி செயற்திட்ட பணிப்பாளர்கள் இருவரால் அவர்களின் | குறித்த அவதானிப்புகள் தொடர்பில் விசாரணைகளை நடாத்தி கூடுதலாக கொடுப்பனவு செலுத்தப்பட்டிருப்பின் அந்த பணம் மீள அறவிடப்பட வேண்டும். | இது தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக விசாரணை உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கை கிடைத்த பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கின்றேன். |

துணைவியரின் பெயர்களில் பதிவு செய்துள்ள வாகனங்களை செயற்திட்டத்தில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்டுள்ளதாக குறிப்பிட்டு ரூபா 3 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை செயற்திட்ட நிர்மாண நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்

-----------------------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நகர மற்றும் ஏனைய கழிவு முகாமைத்துவத்திற்காக விசேட கவனம் செலுத்துவதன் மூலம் நகரங்களில் பாதகமாக தனிநபர் சுற்றாடல் தாக்கங்களை குறைப்பதற்காக பாரிய கொழும்பு திண்மக்கழிவு முகாமைத்துவ செயற்திட்டத்தின் பிரதான நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் ஆகும். எனினும், அந்த செயற்திட்டத்தின் பணிகளை நிறைவு செய்வதில் தாமதம் நிலவியமையால் இந்த இலக்குகளை அடைந்துகொள்வதில் செயற்திட்டத்திற்கு முடியாதிருந்தது. | குறைந்த செயலாற்றலுக்கு உரிய காரணத்தை கண்டறிந்து, துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020ஆம் ஆண்டினுள் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த களனி கழிவு பறிமாற்றல் மத்திய நிலையத்தில் நிர்மாணப் பணிகளின் பௌதீக செயன்முன்னேற்றம் 29% ஆக காணப்பட்டமைக்கு தாக்கமளித்த பிரதான விடயமாக அமைந்தது அந்த பிரதேச மக்களினால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டமை ஆகும். இந்த பறிமாற்றல் நிலையத்தின் நிர்மாணங்கள் தூண்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றமையால் , 1014 தூண்கள் நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், இந்த பாரிய மக்கள் எதிர்ப்பு காரணமாக குறித்த பணிகள் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளன. அவ்வாறே, 2019.04.21 ஆந் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு |

தாக்குதல் காரணமாக இந்த நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்கு தேவையான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வது சிரமமானதாக காணப்பட்டது. அந்த விடயங்களின் காரணமாக இதன் நிர்மாணப் பணிகளை எதிர்பார்த்த காலப்பகுதியில் நிறைவுசெய்ய முடியாதுள்ளமையால், செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த செயன்முன்னேற்றத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.